மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலே சொன்னதைப்போல, ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துவதில் நிதியாதாரம் மற்றும் பணியிடங்களைக் கூடுதலாக்குவது ஆகிய இரு விஷயங்கள் இருக்கின்றன. அதைக் கருத்தில்கொண்டுதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுமார் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி வருகிறபோது, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

பேருந்து வசதி

***15397—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோட்டப்பட்டியிலிருந்து தீர்த்தமலை வழியாக பெங்களூரு வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற கோட்டப்பட்டி முதல் தீர்த்தமலை வழியாக பெங்களூரு செல்வதற்கான வழித்தட பேருந்து இயக்கப்பட வேண்டுமென்றால், 237 கிலோ மீட்டர் வரை இயக்கப்பட வேண்டும். ஏற்கெனவே கோட்டப்பட்டியிலிருந்து அரூருக்கு 11 அரசு பேருந்துகளும், 11 தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அரூரிலிருந்து தருமபுரிக்கு 15 அரசு பேருந்துகளும், 6 தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தருமபுரியிலிருந்து பெங்களூருக்கு

2023 மார்ச் 27]
மிகக் குறுகியகால இடைவெளியில் தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்தது. அதைப்போல, சேலத்திலிருந்து தருமபுரி வழியாக பல பேருந்துகள் பெங்களூருக்கு இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இங்கிருந்து நேரடியாக இயக்கப்பட வேண்டிய அவசியம் தற்போதைக்கு எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். தருமபுரி மாவட்ட கழகச் செயலாளர், பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரூர் சட்டமன்றத் தொகுதி, முற்றிலும் மலைகளால் சூழப்பட்ட பகுதியாகும்; சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் எல்லையாக இருக்கிறது.*

முற்பகல் 10–45

கோட்டப்பட்டி ஊராட்சியில் மொத்தம் 18 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. சிட்லிங் ஊராட்சியில் மொத்தம் 22 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கு விளைகின்ற சிறுதானியங்கள், பூக்கள், மஞ்சள் இலையிலிருந்து தயாரிக்கப்படுகின்ற turmeric leaf oil, *தைலப்புல்லிலிருந்து தயாரிக்கப்படுகின்ற* palm rose oil *போன்றவற்றை சந்தைப்படுத்துவதற்காக விவசாயிகள் ஓசூர், கிருஷ்ணகிரி, பெங்களூரு, சேலம் போன்ற பெருநகரங்களைத் தேடிச் செல்கிறார்கள். தினந்தோறும் அந்த விளைபொருட்களை நிறைய வாடகை கொடுத்து, தனியார் வாகனம்மூலம் எடுத்துச் சென்று வருகிறார்கள். கோட்டப்பட்டி–தீர்த்தமலை–ஊத்தங்கரை வழியாக ஒரு பேருந்துகூட இயக்கப்படவில்லை. இங்குள்ள தீர்த்தமலை என்பது, ஒரு புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், உழவர் சந்தைக்கு பேருந்து இயக்குவது போன்று விளைபொருட்களைக் கொண்டு செல்ல பேருந்து இயக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள், அப்படித்தானே!*

திரு. வே. சம்பத்குமார்: *ஆமாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேளுங்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *அந்த புண்ணிய ஸ்தலத்திற்கு பெங்களூரு, வேலூர் போன்ற பகுதிகளிலிருந்து தினந்தோறும் நூற்றுக்கணக்கானோர் வந்து தரிசனம் செய்துவிட்டுச் செல்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்காகவும், பக்தர்களுடைய வசதிக்காகவும், கோட்டப்பட்டி–தீர்த்தமலை–பொய்யப்பட்டி–ஊத்தங்கரை வழியாக பெங்களூருக்கு ஓர் அரசுப் பேருந்தை இயக்கிட வேண்டும் என்று அன்போடு கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அரூர் பகுதியிலிருந்து சிறுதானியங்கள், பயிர் வகைகள் மற்றும் விவசாயப் பொருட்கள் போன்றவற்றை பெங்களூருக்கு எடுத்துச் செல்வதைப்போல, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதிலிருந்தும் விளைபொருட்கள் பெங்களூருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த இரண்டு மாவட்டங்களிலிருந்தும் தினக்கூலி அடிப்படையில் பெங்களூருக்கு வேலைக்குச் செல்வோரும் மிகவும் அதிகம்; அதேபோன்று, சிறு வியாபாரங்களுக்காக செல்வோரும் அதிகம். இவையனைத்தையும் நாங்கள் அறிவோம்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கின்ற கோரிக்கையைப் போன்று, அவருடைய பகுதிக்கு மாத்திரமல்ல, ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இதுபோன்று தனிப் பேருந்துகளை நேரடியாக பெங்களூருக்கு இயக்க வேண்டும் என்று மேற்படி இரண்டு மாவட்டங்களைப் பொறுத்தவரையிலும் கோரிக்கை வைக்கிறார்கள். இதுகுறித்து எதிர்காலத்தில் ஆய்வு செய்து, தேவையிருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, கோட்டப் பட்டியிலிருந்து அரூருக்கு இயக்கப்படும் 11 அரசுப் பேருந்துகள்மூலம்

2023 மார்ச் 27]

54 நடைகள் இயக்கப்படுகின்றன. 11 தனியார் பேருந்துகள்மூலம் 40 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரூரிலிருந்து தருமபுரிக்கு இயக்கப்படும் 15 அரசுப் பேருந்துகள்மூலம் 85 நடைகள் இயக்கப்படுகின்றன. 6 தனியார் பேருந்துகள்மூலம் 32 நடைகள் இயக்கப்படுகின்றன. மிகப் போதுமான அளவிற்குத்தான் இந்தப் பேருந்துகளின் இயக்கம் இருக்கின்றன.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், டீசல் விலை உயர்வுக்குப் பிறகும், நம்முடைய தமிழகத்தில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல், மிகச் சிறப்பானதொரு பேருந்து சேவையை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து வருகிறார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றியுள்ள மாநிலங்களில் தமிழகத்தைவிட பல மடங்கு கட்டண உயர்வு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், கிராமப்புற மக்களுக்குத் தேவையான பேருந்து வசதிகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்து வருகிறார்கள். முதலில் அடிப்படை வசதியைக் கவனிப்போம்; பிறகு நீண்டதூர வசதியைக் கவனிப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவொரு அத்தியாவசியமான வழித்தடமாகும். எனவே, மறுபரிசீலனை செய்து, பேருந்தை இயக்கிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

அரூர் நகரிலிருந்து-செல்லம்பட்டிபுதூர்-சோரியம்பட்டி வழியாக ஒரு நகரப் பேருந்தை இயக்கவும், அரூர்-மருதிப்பட்டி-மொரப்பூர் செல்லும் பேருந்து வழித்தடம் எண்கள் 26, 17 மற்றும் 2 ஆகியவற்றை பள்ளி செல்லும் மாணவர்களின் நலன் கருதி, கூலித் தொழிலாளர்களின் நலன் கருதி, ஈச்சம்பாடி-மத்தியம்பட்டி-கணபதிபட்டி-பறையப்பட்டிபுதூர் வழியாக இயக்கவும், அரூர்-ஈட்டியம்பட்டி-பாப்பநாயக்கன்வலசை-கூடலூர் வழியாக தீர்த்தமலை வரை ஒரு நகரப் பேருந்தின் வழித்தடத்தை நீட்டிப்பு செய்யவும், தருமபுரி மாவட்டத்தில் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட அனைத்துப் பேருந்துகளையும் மீண்டும் இயக்கிடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கணபதிபட்டி, மருதிப்பட்டி என அவர் தொகுதியில் இருக்கின்ற 18 பட்டிகளுக்கும் பேருந்து வசதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். கடந்த வாரம்தான், நாங்கள் ஊத்தங்கரைக்குச் சென்று இதுவரை பேருந்துகளே இயக்கப்படாத 3 கிராமங்களுக்கு 3 வழித்தடங்களில் புதிய பேருந்துகளை இயக்கி வைத்திருக்கிறோம். பேருந்துகளே செல்லாத பகுதிகளுக்கு தேவையிருப்பின், அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். எனது காரைக்குடி தொகுதியிலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரமுயர்த்தப்படும் என்று சென்ற நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னும் அது செயல்படுத்தப்படவில்லை. அதற்கான காரணத்தைக் கேட்டபோது, இன்னும் அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை என்ற தகவல் வருகின்றது.

முற்பகல் 10–50

ஆகவே, நிறுத்தி வைக்கப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மீண்டும் அங்கே செயல்படுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, காரைக்குடிக்கு புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. TNPSC மூலமாக புதிதாக மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்படுவதை எதிர்நோக்கி, அது அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த ஐந்தாண்டுக் காலமாக வழக்காடு மன்றத்தில் வழக்குகள் நிலுவையிலிருந்த காரணத்தினால், TNPSC அந்தத் தேர்வு முடிவுகளை அறிவிக்காமல் இருந்தது. கடந்த வாரத்தில் அதற்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன; இந்த மாத இறுதிக்குள் அவர்கள் நேர்காணலும் நடத்தவிருக்கிறார்கள். அவற்றை முடித்து, புதிய மோட்டார் வாகன ஆய்வாளர்களை TNPSC தேர்வு செய்து, நம்முடைய துறையில் நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள். அவர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு, இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட பேருந்து பணிமனை, கடந்த 17 ஆண்டுகளாக இன்னும் செயல்பாட்டிற்கு வராமல் இருக்கின்றது. காரணம், சுற்றுச்சுவர் இல்லை; Diesel tank இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு அது செயல்பாட்டிற்கு வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, அவை பெரிய அளவில் நிதி நெருக்கடியில் இருப்பது, அனைவரும் அறிந்தது. அதேபோல், கடன் சுமையும் பெருமளவில் இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஆயிரம்

[*2023 மார்ச் 27*

புதிய பேருந்துகளை வாங்குவதற்கும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்குவதற்கும் அனுமதியளித்திருக்கிறார்கள். முதற்கட்டமாக, அவசியத் தேவை என்பது, கிராமப்புற மக்களுக்கான பேருந்துகளை வழங்குவதாகும். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததுபோல், இன்னும் பல பணிமனைகளில் அதுபோன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டிய அவசியமிருக்கிறது. கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து என்னிடத்தில் அதுபோன்ற கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார். எனவே, இந்தக் கோரிக்கைகள் அடுத்த நிதியாண்டில், நிதியைப் பெற்று செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி என்பது, திருப்பூர் மாவட்டத்தில் ஓர் ஒன்றியமும், ஈரோடு மாவட்டத்தில் ஓர் ஒன்றியமுமாக இருக்கின்ற ஒரு தொகுதி. இந்தத் தொகுதியில் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், ஊத்துக்குளி ஒன்றியத்திலிருந்து ஈரோடு மாவட்டத்திற்கு அதிகளவில் பயணம் செய்கின்றார்கள். பயணம் செய்கின்ற கல்லூரி மாணவர்கள் காலை நேரம் தனியார் வண்டி மற்றும் பேருந்துகளில் படியில் தொங்கிக்கொண்டு பயணித்து வருகிறார்கள். அவர்கள் படிக்கட்டில் தொங்காத அளவிற்கு மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் போதிய அளவிற்கு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று*

2023 மார்ச் 27]

சொன்னால், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்திற்கான CUMTA *என்ற அமைப்பின் கூட்டம் நடைபெற்றபோதும்கூட, எங்களுக்கு அந்த அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அங்கிருக்கிற போக்குவரத்துக் கழக அலுவலர்கள் பள்ளி நிருவாகத்தோடு கலந்துபேசி, எங்கே தேவையிருக்கிறதோ, அவற்றைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். கல்லூரிகளிலும் சில நேரங்களில்* shift *முறைகளை மாற்றுகின்றபொழுது நெருக்கடி ஏற்படுவதால், அவற்றை உடனடியாகச் சரிசெய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கோரிக்கையை எழுத்து மூலமாகக் கொடுத்தால், உரிய அலுவலர்களைக்கொண்டு ஆய்வு செய்து, நிச்சயமாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

குடமுழுக்கு

***4089—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *குருவிகுளம் ஒன்றியம், சாயமலை அருள்மிகு உமையொருபாகேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சாயமலை அருள்மிகு சிவகாமியம்மாள் சமேத உமையொருபாகேஸ்வரர் திருக்கோயில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில். ரூ.42 இலட்சம் செலவில் உபயதாரர் நிதியோடு 10 பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதில்